உள்ளாட்சிமன்றத் தேர்தல்கள்.

* 178. வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா---

ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மன்றம் ஆகிய எல்லாத் தேர்தல்களையுமே ஒரே சமயத்தில் நடத்துகிற செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

*** 179. திரு. பி. எஸ். மணியன்**
திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்களைப் பொதுமக்களின் வாக்கெடுப்பின்மூலம் தேர்ந்தெடுக்க ஏதேனும் திட்டம் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தற்போது ஊராட்சித் தலைவர்கள் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் முறை செயல்படுவதை ஆராய்ந்து, பின்பு அம்முறையை ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைவர்கள் தேர்தலுக்கும் நீடிக்கலாமா என்று பரிசிலனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், நகராட்சி ஆகிய எல்லாவற்றுக்குமே சட்டமன்றத் தேர்தல் நடைபெறுகிற அதே கட்டத்தில் நடத்தி, அதன்மூலம் ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவைதான் தேர்தல் என்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்று எல்லா வகையான தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்துவது என்பது இயலாத ஒன்று. சென்னை மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்த வரையில், அதனுடைய காலம் 1-11-1971 அன்றோடு முடிவுறுகிறது. நகராட்சிமன்றத்தின் காலம் 1-5-1974 அன்றோடு முடிவுறுகிறது.

1973 பிப்ரவரி 28]

ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் ஆகியவற்றினுடைய காலம் 2-8-1975 அன்றோடு முடிவுறுகிறது. ஆக, இப்படி வெவ்வேறு ஆண்டுகளில் வெவ்வேறு தேதிகளில் அவைகளுடைய காலங்கள் முடிவுறுகின்றன. அதுமட்டுமல்லாமல், தேர்தலை நடத்தும்போதுகூட ஒரே சமயத்தில் நடத்துவதனால் பல்வேறு இடையூறுகள் வரும். ஆகவே, சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தல் ஒரு சமயத்திலும், நகராட்சிமன்றத் தேர்தல் மற்றொரு சமயத்திலும், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் தேர்தல் வேறொரு சமயத்திலும் நடத்தவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத் தேர்தலை நடத்தும்போது, ஊராட்சி மன்றத் தலைவரையும் ஊராட்சி மன்றப் பெருந் தலைவரையும் மக்களே தேர்ந்தெடுக்கக் கூடிய வகையில் அரசு பரிசிலனை செய்யும் செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய கருத்து பரிசிலனையில் இருந்து வருகிறது. ஊராட்சி மன்றத் தலைவரை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுப்பதன்மூலம் ஏற்படக் கூடிய நிலைமைகளைப் பொறுத்து அறிக்கை தரும்படியாக இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அந்த அறிக்கை வந்த பிறகு அதுபற்றிய முடிவு எடுக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : ஏற்கெனவே இந்தச சபையில் இம்மாதிரிப் பொது ஜன வாக்கெடுப்பின்மூலம் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வகைசெய்யும் மசோதா வொன்று கொண்டுவரப்போவதாக அறிவித்திருந்தும் கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அம்மாதிரி மசோதா கொண்டுவருவதாகச் சொல்லவில்லை. ஊராட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுப்பது நிர்வாகம் செம்மையாக நடப்பதற்குச் சாதகமாக அமையுமானால் அம்முறையைக் கொண்டுவரலாம் என்று கூறப்பட்டது. இப்பொழுது அந்த அடிப்படையில் அறிக்கை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலிருந்தும், ஊரக வளர்ச்சித்துறை இயக்குநரிடத்திலிருந்தும் கேட்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகு இந்தப் பிரச்சினைகுறித்து ஆராய்ந்து, நல்லதொரு

முடிவாக வந்தால்—இரு வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டாலும்—நல்ல முடிவு ஏற்படலாம், அதைப்பற்றி முடிவு எடுக்கலாம், ஆகவே, இது பரிசிலனையில் இருந்து வருகிறது என்று கூறினேன்.

திரு. தி. பொன்னுமலை : எல்லாத் தேர்தல்களையும் ஒரே முறையாக நடத்தாவிட்டாலும்கூட, ஊராட்சி ஒன்றிய உறுப்பினர், ஊராட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர் ஆகிய மூன்று பேரையும் சேர்த்து ஒரே காலத்தில் தேர்தல் நடத்தினுல் வசதியாக இருக்கும். அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியத் தலைவர் எந்த முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிருர் என்ற முடிவு ஏற்பட்ட பிறகுதான் மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்ற முறையை நாம் கையாள்வதுபற்றி யோசிக்க வேண்டி வரும்.

திரு. என். கிட்டப்பா : நகராட்சி மன்ற உறுப்பினர்களை அந்தந்த வார்டு வாக்காளர்கள் தேர்ந்தெடுப்பதைப்போல், அந்தந்த நகர எல்லைக்குட்பட்ட வாக்காளர்கள் அந்தந்த நகர மன்றத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு கருத்தும் சொல்லப்பட்டு வருகிறது. ஆனுல் அதுபற்றிய பரிசிலனை இப்பொழுது அரசாங்கத்திடத்தில் இல்லை. அதுபற்றிய கருத்துக்கள் வருமேயானுல் அப்பொழுது அரசாங்கம் அதுபற்றி ஆராய வேண்டியிருக்கும்.

திரு. எம். சுரேந்திரன் : ஊராட்சித் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது வாக்காளர்களாக இருக்கும்பொழுது, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை மெம்பர்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நிலைமை இருப்பதாலே ஊராட்சி ஒன்றியத் தலைவர்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வருகிறபொழுது மெம்பர்கள் வாக்களித்து நம்பிக்கையில்லை என்று ஆக்குவதைவிட வாக்காளர்களே நம்பிக்கையில்லை என்று தெரிவிப்பதுதானே சரியாக இருக்க முடியும் என்று அரசாங்கம் கருதுகிறதா ?

1973 பிப்ரவரி 28]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் தவறுகள் செய்தால் அவர்கள் நீக்கப்படுவதற்கான விதிமுறைகள் ஏற்கனவே இருக்கின்றன. இப்பொழுது எப்படி ஊராட்சி மன்றத் தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்களோ அதைப்போன்றே ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

திரு. சி. க. வடிவேலு: தலைவர் அவர்களே, நகராட்சித் தேர்தல்களிலே கட்சிச் சின்னம் ஒதுக்கப்படுவதுபோன்று ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்தல்களிலும் கட்சிச் சின்னம் பயன்படுத்த அரசாங்கம் ஆணையிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தல் நேரடியாக நடத்தப் போகிறோமா என்பதைபற்றி முடிவு எடுக்கப்பட்டதற்குப் பிறகு யோசிக்க வேண்டிய விஷயம் அது.

வந்தவாசிப் பேரூராட்சிக்குக் கடன்.

*180. வினா—**திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-73-ம் ஆண்டில், கடைகள் கட்டுவதற்கென வந்தவாசி பேரூராட்சிக்கு அரசு கடனுதவி ஏதேனும் அளித்துள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) ரூபாய் 8,000.

திரு. கே. எ. வகாப்: அங்கே கடைகள் கட்டப்படுகிற வேலை மிகவும் வேகமாக நடைபெற்று வருகிறது. மேற்கொண்டு தொகை சாங்ஷன் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இவ்வாண்டு 8 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிகமாக வேண்டுமானால் அடுத்த ஆண்டிலே வரவு-செலவுத் திட்டத்திற்குப் பிறகுதான் அதுபற்றிப் பார்க்க வேண்டும்.